P.G & RESEARCH DEPT. OF PHYSICS
D.G. GOVT. ARTS COLLEGE MAYILADUTHURAI

# கல்லூரியில் மதிப்பீட்டு செயல்பாட்டுச் சங்கக் கூட்டம்




கூட்டத்தில் பங்கேற்றோர்.

மயிலாடுதுறை, பிப். 28: மயிலாடுதுறை தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் இயற்பியல் துறை சார்பில், மதிப்பீட்டுச் செயல்பாட்டு சங்கக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு, கல்லூரி முதல்வர் (பொ) கே. பொன்னி தலைமை வகித்தார். இயற்பியல் துறைத் தலைவர் துரை. பென்னி அன்புராஜ் முன்னிலை வகித்தார். சங்க பொறுப்பாசிரியர் உதவிப் பேராசிரியர் எஸ். சரவணன் வரவேற்றார். உதவிப்பேராசிரியர் தெ. சிவயோகம், சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார். சிறப்பு விருந்தினராக மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை மகளிர் நல மேம்பாட்டு நிறுவன உதவி திட்ட அலுவலர் பி. பாலன் பங்கேற்று, 'வாழ்வியல் மதிப்பீடுகளும், செயல்பாடுகளும்' எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

நிறைவாக இயற்பியல் துறை மதிப்பீட்டுச் சங்கச் செயலர் மாணவி எம். தனலெட்சுமி நன்றி கூறினார். இதில், விநாடி - வினா போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.